செய்தி வெளியீடு எண்:870 நாள் : 7.10.2010

**செய்தி வெளியீடு**

**ஐந்து கட்டங்களில் 1 கோடியே 52 இலட்சத்து 80 ஆயிரம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது**

**மேலும் 10 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்திட முதலமைச்சர் தலைமையிலான சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழு ஒப்புதல்**

**முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு**

2006 சட்டமன்றத் தேர்தலையொட்டி தி.மு.கழகம் அளித்த தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வண்ணம் இதுவரை ஐந்து கட்டங்களில் 3492 கோடியே 72 இலட்சம் ரூபாய்ச் செலவில் 1 கோடியே 52 இலட்சத்து 80 ஆயிரம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு; 3396 கோடியே 58 இலட்சம் ரூபாய்ச் செலவில் 1 கோடியே 40 இலட்சத்து 84 ஆயிரத்து 922 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சிய வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

இந்நிலையில், சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்கள் மாவட்டங்களுக்கு கூடுதல் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் தேவைப் படுவதாகக் கோரிக்கைகள் அளித்துள்ளதைத் தொடர்ந்து, அந்தக் கோரிக்கைகள் குறித்து முடிவு செய்திட முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவின் கூட்டம் 7.10.2010 அன்று புனித ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்றது.

இதில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் திருமதி யசோதா (காங்கிரஸ்), திரு வை. சிவபுண்ணியம் (இந்திய கம்யூனிஸ்ட்), திரு எச். அப்துல் பாசித், (இந்திய யூனியன் முஸ்லீம் லீக்), திரு மு. ஜெகன் மூர்த்தி (புரட்சி பாரதம்), திரு. து. ரவிக்குமார் (விடுதலை சிறுத்தைகள்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், ஐந்தாம் கட்டமாக நடப்பு நிதியாண்டில் 40 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்திட பிறப்பிக்கப் பட்ட ஆணையின்படி, தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் சட்டத்தின் அடிப்படையிலேயே மறு ஒப்பந்தப் புள்ளி கோராமல் 25 சதவீதம் வரை, அதாவது 10 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கூடுதலாக கொள்முதல் செய்வது என்றும், அவற்றின் விநியோகப் பணிகளை 2011 ஜனவரி மாத இறுதிக்குள் பூர்த்தி செய்திட வேண்டுமென்றும் முடிவுகள் எடுக்கப்பட்டன என முதலமைச்சர் கலைஞர் தெரிவித்தார்.

*****

வெளியீடு:—இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9